தென்காசி மாவட்ட நிலஅளவைப் பதிவேடுகள் துறை உதவி இயக்குநர்(கூ.பொ) (ம)
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின்(நி.அ) செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்: திரு.ச.இராமசுப்பிரமணியன்

ந.க.அ2/55/2025 நாள்: .07.2025

| | |
|---|---|
| பொருள் | பணிவரன்முறை; நில அளவை பதிவேடுகள் துறை– தென்காசி மாவட்டம்– திண்டுக்கல் மாவட்டத்தில் பணியிலிருக்கும் பொழுது காலஞ்சென்ற புல உதவியாளர் க.சிவராம்சுந்தர் என்பவரின் வாரிசுதாரரும் மனைவியுமான திருமதி.சி.மகாலட்சுமி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் வழங்கப்பட்டது– பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல் – தொடர்பாக |
| பார்வை | 1.அரசு கடித (நிலை) எண்.18.தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(Q1) துறை நாள்;23.01.2020<br>2.அரசாணை (நிலை)எண் 33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்தறை நாள்;08.03.2023<br>3.அரசு கடித எண் 5532/G2/2023–1 மனிதவள மேலாண்மைத் (G2) துறை நாள் 20.09.2023<br>4.சென்னை நில அளவை மற்றும நிலவரித்திட்ட இயக்குநரின் கடிதம் ந.க.ர1/3427/2022 (12) நாள்;06.01.2025<br>5.தென்காசி மாவட்ட நிலஅளவை பதிவேடுகள் துறை உதவி இயக்குநரின் செயல்முறை ஆணை ந.க.அ1/54/2025 நாள்;09.01.2025 |

******************************

ஆணை:

திண்டுக்கல் மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் துறையில் புல உதவியாளராக பணியாற்றி பணியிலிருக்கும் பொழுது 30.04.2023 அன்று காலஞ்சென்ற க.சிவராம்சுந்தர் என்பவரின் வாரிசுதாரரும் மனைவியுமான திருமதி.சி.மகாலட்சுமி என்பவருக்கு பார்வை (4)இல் கண்டுள்ள கடிதத்தின் படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் வழங்க ஆணை பெறப்பட்டதைத் தொடர்ந்து பார்வை (5)இன் படி திருமதி.சி.மகாலட்சுமி என்பவருக்கு தற்காலிக இளநிலை உதவியாளராக நியமனம் வழங்கப்பட்டு பணியாளர் 10.01.2025 முற்பகல் இளநிலை உதவியாளராக இம்மாவட்டத்தில் பணியேற்றுள்ளார்.

பார்வை (2)இல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட அரசு ஊழியர்களின் பணிகளை அவர் பணியில் சேர்ந்த நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் தகுதிக்கு உட்பட்டு நியமன அலுவலரே முறைப்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை மற்றும் அரசுக்கடிதம் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது.அதன்படி , இவ்வலுவலகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிக பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.சி.மகாலட்சுமி என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 10.01.2025 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

உதவி இயக்குநர்(கூ.பொ),
மாவட்ட நில அளவை அலுவலகம்,
தென்காசி.

15.7.25

பெறுநர்:

திருமதி.சி.மகாலட்சுமி,
இளநிலை உதவியாளர், மாவட்ட நில அளவை அலுவலகம்.

தென்காசி.(வழி- கண்காணிப்பாளர் மூலமாக)

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

1.இயக்குநர் . நில அளவை மற்றும் நிலவரித்திட்டம்(நி.அ), சென்னை-05
2.மண்டலத்துணை இயக்குநர், நில அளவைப் பதிவேடுகள் துறை, மதுரை-20

நகல்; உதவி இயக்குநர்கண்காணிப்பாளர்.
நகல்;அ1,அ3,அ4,அ5,அ6 மற்றும் அ7 இருக்கைகளுக்கு புதிய எண்ணில்.
நகல் அறிவிப்பு பலகை